ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி துணை,

திருநெல்வேலி

[illegible]

திருவு[illegible] [illegible]

ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி பேரிற்

MARRIAGE SONGS

கல்யாணப்பாட்டுகள்

First Part.-Nalungu,

முதல் பாகம்.—நலுங்கு.

இஃது

திருநெல்வேலி

போட்டோகிறப் பரிசல் காம்படிஷன் ஆபீஸ்

[*Photographic Price Competition Office*]

S. துரைஸ்வாமி அய்யரால்

இயற்றப்பட்டு

திருநெல்வேலி

"வாணீவிலாஸம் பிரஸ்" ஆபீஸில்

பதிப்பிக்கப்பட்டது.

(முதற்பதிப்பு:— 1,000 காபிகள்)

(*Registered Copy Right*-ரிஜிஸ்டர்ட் காபிரைட்)

கீலக ஹு-1083 ம் ஹு

இதன்விலை] 1908 [அணா ஒன்று

உ

ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி துணை.

திருநெல்வேலி

குறுக்குத்துறை என வழங்கும்

திருவுருமாமலையின்கண் எழுந்தருளிய

ஸ்ரீ சுப்ரமண்யஸ்வாமி பேரிற்

Marriage-Songs.

கல்யாணப்பாட்டுகள்.

Nalungu.—First Part.

நலுங்கு.—முதல் பாகம்.

இஃது

திருநெல்வேலி

போடோக்கிறபிக் பிரைஸ் கம்பிடிஷன் ஆபீஸ்,

[*Photographic Prize Competition Office*]

S. துரைஸாமி அய்யரால்

இயற்றப்பட்டு

திருநெல்வேலி

"வாணீவிலாஸம் பிரஸ்" ஆபீஸில்

பதிப்பிக்கப்பட்டது.

(முதற்பதிப்பு—1,000 காபிகள்)

(*Registered Copy Right*-ரிஜிஸ்டர்ட் காபிரைட்.)

கீலக௵—1083-ம௵

[விலை] 1908 [அணா ஒன்று.

கந்தருவர்   ஸ்ரீ சுப்பிரமணியர்   கந்தருவர்

முன்னுரை.

எனதன்பர்களே!

தற்சமயம் நமது நாட்டில் பெண்பிள்ளைகளின் வித்யாப்யாஸப் பயிற்சி வரவர விருத்தியடைந்திருப்பதை கவனித்து, “கல்யாணப்பாட்டுகள்” என்னும் பெயர்வகித்த இப்புத்தகத்தை நமது பாலப் பெண்பிள்ளைகள் மிக்கஎளிதாகப்படிக்க இனிய நற்றமிழ் நடையிலும், கானவிருத்தியடைய பற்பல விதநூதன அத்புத வர்ணமெட்டுகளிலும், ஆத்மார்த்தமாக பக்திரஸங்களிலும், மனோத்ஸாகமுண்டாக ஸ்ரீங்கார ரஸங்களிலும், கேவலம் பச்சைப்பதங்களின்றி படிக்கப் படிக்கப் பதிவிச்வாஸமும் தெய்வ பக்தியும் மனஉத்ஸாகமும் உண்டாகி, சிரமமின்றி விருத்தியாகட்டுமென்பதே எனது முதன்மையான உள் மனக்கருத்து. [இதற்கு முன் 1905௵த்தில் “நலுங்குப்புஸ்தகம்” என பதிப்பித்து காபிரைட் செய்த 1000 புஸ்தகங்களில் அநேகமாய் சிலவழிந்து போய்விட்டன.] ஆகையால் இப்பொழுது அவைகளை விசேஷமாய் விருத்திபண்ணி, தனித்தனியே பிரிவினையாகவும், பற்பல பாகங்களாகவும் பிரித்து “கல்யாணப்பாட்டுகள்” எனப்பொதுப் பெயரிட்டு சில்லரைப்புஸ்தகங்களாக வெளியிடலானேன்.

பண்டிதசிகாமணிகளாகிய பெரியோர்கள் என்னால் தவறுதலாக ஏற்பட்ட சொற்குற்றம் பொருள்குற்றம் முதலியவைகளை சிறிதும் பாராட்டாமல் இச்சிறு புத்தகத்தை மிக்க அன்புடன் அங்கீகரிக்கும்படி பன்முறையும் பிரார்த்தித்து கேட்டுக்கொள்கிறேன்.

S. துரைஸாமி அய்யர்.

உ

சாற்றுக்கவிகள்.

திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரந்தாலுகா அரிகேசவநல்லூர் வித்வான் மக-ள-ள-ஸ்ரீ பு. வ. முத்துசுப்பையரவர்கள் இயற்றிய

வெண்பா.

மெச்சுபுகழ் போடோகிராப் மேவுதுரை ஸாமியய்யர்
பக்ஷமொடு செய்நலுங்குப் பாட்டுரைக்க — இச்சைபெறும்
காமினிக்கும் மேஷினிக்கும் நாட்டில் மணம்பொருந்தும்
பாவையர்களெல் லாமுவக்கும் பார்.

தூத்துக்குடி தாமோதரங் கணக்குப்பிள்ளை குமாரர் மக-ள-ள-ஸ்ரீ சங்கரதாஸ் அவர்கள் சொல்லிய

வெண்பா.

தெலுங்கு தமிழ்மெட்டு சிரிங்கி லிஷ்நோட்
டிலுங்குணமாய்ப் பாட விசைத்து — நலுங்கு
வரைச்சாமிக் காக வழுத்தினு நல்ல
துரைச்சாமி வேளு முவந்து.

திருநெல்வேலிஜில்லா சங்கரநயினார்கோவில்க் தாலுகா திருவேங்கிடம் மக-ள-ள-ஸ்ரீ சங்கரநாராயண பாரதிகள் பாடிய.

வெண்பா.

மூவருண மெட்டிசையால் முன்கடைந்த ஆரமுதக்
கோவையுறு சிர்நலுங்கு கூறினனால் — பாவலர்க
ளென்னளும் போற்று மெழில்கொடுலாஸாமிம[illegible]
மின்னு ரயிற்கையான் மேல்.

MADRAS

சாற்றுக்கவிகள்.

இஃது திருநெல்வேலிஜில்லா அரிகேசவநல்லூர் வாழும் மகா-ள-ள-ஸ்ரீ L. முத்தையாபாகவதரவர்களால் இயற்றிய

கலித்துறை.

தெலுங்குந் தமிழுஞ் சீர்பெருமிங்கிலீஷ் தினுசுகளும்
நலுங்கும் ஜாவளி நோட்டுகளுமெந்த நல்லசபையுங்
குலுங்கிச் சிரக்கம்பஞ் செய்திடவே நற்கோதையர்க்கு
நலங்கொள விங்குரைத்தான் அரைஸாமியாம் நற்றவனே.

அம்பாசமுத்திரம் போடோகிராபர் சோலை ஷண்முகம்பிள்ளை இயற்றிய

விருத்தம்.

வானாட்டின் கோமகரும் மருள்வி[illegible]கையரும்
மருவுசரவணபவன்மேற்
பூணுறுங் குழலியரும் புகழ்ந்துபாடப் பொய்புகலான்
கருணைப்பண்பே பொலிந்தேதோன்றல்க்
கோனுறுங் கொண்டையாரும் மெச்சவல்லான் குணமிகுந்த
அரைஸாமிக் குவலயத்தே
தேனுறுங் கனிச்சுவையும் செம்பாகுந் திரண்டினிக்குந்
தமிழ்நலுங்கு செப்பனன்றே.

நலுங்கு யென்னும் இப்புத்தகமானது தெளிவான நடையில் இனியபதச் சொற்களாலும் பற்பலவித நூதன வர்ண மெட்டுகளாலும் அமையப்பெற்றிருப்பதினால் யாவரும் விரும்பத் தக்க விஷயமே. பாலியப்பெண்களுக்கும் மிக்க எளிதாக கானப்பியிற்சி யுண்டாக்கக் கூடியதே. இப்பெயர்பூண்ட புத்தகம் யாதேனும் இதற்குமுன்னமே பதிப்பிலிருக்கினும் இத்தகைமையுள்ளது பன்முறையும் பிரயோஜனமுள்ளதே.

S. சாமள பாகவதர்.
திருநெல்வேலி மேலமாடவீதி.

உ

ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமிதுணை.

திருநெல்வேலி-குறுக்குத்துறை என வழங்கும்

திருவுருமாமலையின் கண் எழுந்தருளிய

ஸ்ரீ சுப்ரமண்ய ஸ்வாமி பேரிற்

கல்யாண-ப்பாட்டுகள்.

காப்பு.

வெண்பா.

முன்னவன்மு னின்றுங் முடியாத தொன்றுளதோ
அன்னவனை யானு மடிபணிந்தே னென்ன லுங்கு
மங்களமாப் பாடுவதை மாநிலத்தோர் கொண்டாட
ஐங்கரத் தான் றுணை யாகன்.

துதித்தேன் உருபமலையிற் றிலங்கு மறுமுகனை
மதித்தேன் என்று மகிழவே—பதிதனிலே
சித்தமகிழ் மாதர்கட் சீர்குலுங்குதனைப்பாட
சித்தமு மறுமுகனை நினைந்து.

வெண்பா.

வெள்ளை மதகரியன் விண்ணவர்கோன் மங்கைக்கும்
வள்ளிக்கு நாயகனை வாழ்த்துரைப்பத்—தெள்ளமுதச்
செஞ்சொற் பிழைபகற்றிச் சீர்பரவ வாணியின்பொற்
கஞ்சமலர்க் காலிணையே காப்பு.

1. இராகம் குறிஞ்சி. கண்டஜாதி. ஏகதாளம்.

பல்லவி.

கௌரீ கல்யாணம் வைபோகமே
கௌரீ கல்யாணம் வைபோகமே.

சரணங்கள்.

ஜெபசங்கரீபுத்ர ஜெபதிவ்ய க்ஷேத்ரா
ஜெபஸரோருகநேத்ர ஜெபமேரு காத்ரா. (கௌரீ)
மங்கைதெய்வாய மணந்த சிங்காரா
வள்ளியொருபுறமமர் வடிவேலா சூரா. (கௌரீ)
புள்ளிமயிலேறிவரும் புனிதகுண சீலா
யோகிமுதலமரர்கள் புகழ்வடி வேலா. (கௌரீ)
அன்புமிகுக்குருஸாமி அரும்பதம் பாட
அநுதினமு முருகன் சீராடிக்கொண்டாட.

2. இராகம் சங்கராபரணம் ஏகதாளம்.

(ஸ்ரீராமா ஜெய ஜெய) என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1. ஸௌந்தரஞ் சேர் திருக்குருந்துறை ஸுப்ரமண்யர் மீதினிலே
சந்தமுடன் நலுங்குரைக்கத் தந்திமுகன் காப்பாமே.

2. இந்திராதி தேவர்முதல் இஷ்டமன்னர் வீற்றிருக்க
சுந்தரவேல் ஸுப்ரமண்யர் சுபமாக நலுங்கிடவே.

3. மஞ்சளுடன் குங்குமமும் மணமிகுந்த சந்தனமும்
கொஞ்சமொழி மாதுவள்ளி கொண்டுவந்து நலுங்கிடவே.

4. வெற்றிலையுங் களிப்பாக்கும் விதவிதமாய்ப் பத்திரியும்
சுத்தயேலக்காயுடனே சுருள்கொடுத்து நலுங்கிடவே.

5. மல்லி முல்லை மருக்கொழுந்து மலைமலர்கள் முடிசூடி
வள்ளியுடன் வடிவேலன் வைபோகமாய் நலுங்கிடவே.

6. அருமைத்துரை ஸாமிபதம் அன்புடன் நாம்பாடநிதம்
விருப்பமுடன் மாதுவள்ளி வேலனுமாய் நலுங்கிடவே.

---

3. இராகம் சங்கராபரணம், ஆதிதாளம்.

(பிராணநாத பிராநட்ரோ) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

தெய்வத்திலுந் தெய்வம் நீயே—ஐயா (தெய்வ)

அநுபல்லவி.

மெய்யழகும்வடி வேலழகும் பன்னிர்
கையழகும்அறு முகத்தழகும் இனி. (தெய்வ)

சரணம்.

புள்ளிமயிலேறி ஆடு மொய்பாரமும்
வள்ளி நலுங்கிட்டு மருவுஞ்சிங்காரமும்
தெள்ளமுதவய சொல்லின் செம்பீரமும்
விள்ளுந் துரைஸாமி வெற்றிப்பதம்பாட. (தெய்வ)

4. (பலம் கஜலோடி) என்ற பார்ஸி இந்துஸ்தானி வர்ணமெட்டு.

பல்லவி.

நீலமயில் முருகா வாரும் நித்தமும் ந[illegible]ங்கிடவே (நீல)

அநுபல்லவி.

மாலைப் பொழுதில் சோலைக் கருகினில்
[illegible]டருமலர் கொய்கையிலே. (நீல)

சரணம்.

தழுவியே கட்டினீர் விழித்தெனைப் போற்றினீர்
ஜடைதனில் மலர் சுற்றினீர்-ஸாமி-ஜடைதனில் மலர் சுற்றினீர்,
பழகிய வர்போல குழையவே பேசினீர்
பாதிஇ ரவுமுழுதும்-ஸாமி-பாதிஇ ரவுமுழுதும்,
ஆசையால் [illegible] கூசாமல் கட்டினேன்
அறுமுகா வந்தென்னை யாதரிக்கவே,
துய்யனே மெய்யனே
துரைஸாமி பதம்பாடினேன்-ஸாமி-துரைஸாமி பதம்பாடினேன் (நீ

5. இரங்கம் பரசு. சாப்பு தாளம்.
(லேலியா ஸாஹுனே) என்ற வர்ணமெட்டு

பல்லவி.

சரணஞ் செய்வேனே- (சர)

அநுபல்லவி.

தருணமிதுவே தஞ்சம்நான் தலுங்கிட- (சர)

சரணங்கள்.

1. அருளுருவாகிய ஆனந்தவேலவா
கருணையைநாடியே காத்திரு[illegible]றநான். (சர)
2. கொஞ்சுங்கிளிமொழியாள் வஞ்சிதெய்வானை வள்ளி
ரஞ்சிதமாய்ப் புகழும் குஞ்சரி நாயகா. (சர)
3. உங்களடிமை துரைஸாமி புனைந்தபதம்
சங்கையின்றி நான்பாடி சந்ததமுனைத்தேட. (சர)

6. (ஸ்ரி-கக்க-கமக-ரிஸ-ரிஸா) என்ற நோட்டின் வர்ணமெட்டு

பல்லவி.

வடி-வேலன்-என்னுடன்-நலு-ங்கிட
வானவர்கள்புகழ்ந்திட, புகழ்ந்திட, புகழ்ந்திட (வடிவேலன்)

சரணங்கள்.

1. தீதில்லாத ஸோமவாரத்தில் திவ்யசந்திரிகை நேரத்தில்
ஆதிமுதலாய் ஆசையைக் காட்டி நேசம்வைத்த. (வடிவே)
2. ஹாரகெம்பீரன், அதிகுலதீரன், அழகியமாரன், என் குமரன்
தீர சூரன் சித்தநிர்மல ஜெசஉதாரன். (வடிவே)
3. ஆலமுண்ட கண்டசிவன் அரும்புதல்வன் ஆறுமுகன்
நீல மயூரன் நிகிலலோக ஜனப்ரதாபன். (வடிவேலன்)
4. சூலின் அனு-கூலன் உமை-பாலன் வள்ளிலோலன்
சீலன் துரைஸாமி தப்பப்பழங்கள் தன்னைப்பாடினேன் (வ)

7. (ஸக்க-ஸக்க-ஸக்க-மகரிஸ-ரிரி-நிரி-நிரி-கரிஸநி) என்ற
நோட்டின் வர்ண மெட்டு.

1. அங்குமிங்கும் அலைந் தென்னைத்தேடி
அருமையாகத் திருமணஞ் செய்த
ஆஸைக்கிசைந்த என் ஆறுமுகா
அன்புடன் என்னுடன் நலுங்கிடவா. (அங்கும்)
2. என்னை விரும்பியே மணந்தவரீர்
எப்படி மறந்தீரோ இதுவரையும்
கன்னியர் உம்மை யாராகிலும்
கை கொட்டிமுத்தாளோ கூறுமிப்போ. (அங்கு)
3. இப்புவியி லேதும் தப்பிதங்கள்
எப்பொழு தாகிலும் செய்தேனோ
செப்பும் துரைஸாமி பதம்பாடிதனும்
செப்படி வித்தைகள் செய்யலாமோ. (அங்கும்)

8. இராகம்-காபி. ஏகதாளம்.

(அங்கே வரக்கூடாதையா) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிட வாரும் ஸாமி. (நலு)

அநுபல்லவி.

பலதரம் துதித்தேன் பன்னிருகையா. (நலு)

சரணங்கள்.

1. மின்வடிவேலுடன் விளங்கும் பிரகாசனே
உன்னையே யல்லால் பின்னை யாரென் துணை. (நலு)

2. எங்குல தெய்வமே இன்னமு மேன் தினம்
சிங்காரமாகவே திருவருள் கண்டாரும். (நலு)

3. நெஞ்சினிற் சஞ்சலம் மிஞ்சுதே யென்செய்வேன்
செஞ்சொல் கவிதுரை ஸாமிக்கிரங்கி. (நலு)

9. இராகம் முகாரி சாப்பு தாளம்.

(அருமைக்கண்மணியைக்காணேனே) என்றவர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிடவாரும் கண்ணாளா—உம்மை
நாடுகின்றேன் வெகு நாளாய். (நலு)

சரணங்கள்.

1. துலங்கிய முகத்தைத் நான் கண்டு—இன்று
சொகுஸாயுன் மேலாவல் கொண்டு
இலங்கு மல்லிகைப் புஷ்பச் செண்டு—இங்கு
இருப்பதைப்பார் மனங்கொண்டு. (நலு)

2. சாஸ்திரம் பழகிய நாத்ரன்—நல்ல
தன்மையோடுயர் குல கோத்ரன்
சூஸ்திர விதியறிந்த நேத்ரன்
துரைஸாமி புகழும் சற்பாத்ரன். (நலு)

10 இராகம் அடாணு. ரூபக தாளம்.

பல்லவி.

சித்ரமுத்து ரத்னமாலையிட்ட மணவாளா—நின்
சித்தம்மகிழ்ந்து நலுங்கிடவாரும் கண்ணாளா. (சித்ர)

அநுபல்லவி.

குற்றமனைத்தும் குணங்கொள்ளும் லோலா
(துள்ளல்) { சோலாகல-வேலா அநு கூலாகுண-சிலா நிதம். } (சித்ர)

சரணம்

சந்த்ரபிம்பத்தைப் பழித்திடும் வதனமாது சொல்லும்
விந்தைமொழிதன்னை கேட்டருளுமிப்போது
சுந்த்ரமதன்கணைவந்து தாவுதே எந்தன்மீது உந்தன்
சிந்தைதனிலின்னம் எதுக்கோ இவ்விதவாது
கந்தஸாமிதன்னைச் சொந்தமாய்ப் போற்றிடும்
(துள்ளல்) { எந்தன் துரை-ஸாமிபதம் சிந்தைமகிழ்ந்-தாடிப்பாடி } (சித்ர)

11 இராகம் கல்யாணி. ஏகதாளம்.

(எப்போது காணுவேனோ மானேநான்) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

நலுங்கிடப் போவோம் வாரும் ஸாமிநாம். (நலு)

சரணங்கள்.

1. பலவித வைபவம் துலங்கும் திவ்ய
பந்தலில் சென்றுநாம் சிந்தை மகிழவே. (நலு)
2. எத்தனையோ நாள் எண்ணியே காத்தும்
இன்னமும் உபவுமக்கே னெந்தன்மே லில்லை. (நலு)
3 எல்லோர்க்கும் மேலவனே என்றுன்னை போற்றினேன்
சொல்லாற் றுதித்திடும் துரைஸாமி பதம் பாடி. (நலு)

12. இராகம் கமாஸ் ஆதிதளம்.

(மாவும்பிலாவும் கொய்யாவும் பழுத்திருக்கு) என்ற டிராமாமெட்டு.

கண்ணிகள்.

1. அன்னை வள்ளியும் அறுமுக வேலனுமாய்
நன்னனுக் கிட்டதை நானெவ்விதம் சொல்வேன்.

2. பச்சை மஞ்சளுடன் பற்றும் பங்காள மஞ்சள்
இச்சையுடனே எடுத்துக் கலந்து வைத்தாள்.

3. மல்லிகை ரோஜா மருமலர் செண்பகம்
முல்லை யிருவாக்ஷி மோகமாய் கொய்து வைத்தாள்.

4. கதம்ப கஸ்தூரி பந்துகள் பலவிதம்
கந்தனுக் கென்றே கட்டிவைத்தாள் நிதம்.

5, அத்தர் புனுகு அம்பர் ஜெவ்வாது ஹிரான்
சக்தி வேலனுக்கே பக்தியுடனே வைத்தாள்.

6. பற்றரை மாற்றுள்ளப் பளிங்கான தட்டினில்
வெற்றிலைச் சுருள் விதமாய்க் கிழித்து வைத்தாள்.

7. வல்லவை நேசா மகிழு முல்லாவா நீர்
அல்லல் தவிர்த்தென்னை ஆள் ஜெகதீசா.

8 வெற்றி துரைஸாமி வேலன் மேல்பதம்பாட
நற்றவப்பயனால் நானுமதனைப்பாட. (அன்னை)

13. இராகம் செஞ்சுருட்டி ரூபக தாளம்

(கைலேஜாததுடாலாதியா)என்ற இந்துஸ்தானியின் வர்ணமெட்டு.

கண்ணிகள்.

1. ஸரஸ உல்லாஸ லோலா சரவணபவவேலா
கிரமதால் நலுங்கிட கலக்கமென்னடா சீலா (ஸரஸ)

2. காலுமெக்காலுமே நானுங் கனவிலுமறவேனே
வேலுங்கைக்கொண்டநாதா வேண்டுமென்மீன்னம்வாதா (ஸ)

3. ஆசைநேசமுள்ளகாமீ அந்தரெங்கஞ்சொல்லும் ஸாமி
தாஸன்துரைஸாமி தன்னை தயவுடன்காருஞ்சேர்ன்னேன் (ஸ)

14. இராகம் செஞ்சுருட்டி ரூபக தாளம்.

(நந்தன்சரித்திரம் சிவலோகநாதனே) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

சிங்காரமாய் நன்னலுங்கிட்டு திருவருள் கண்பாரும் (சிங்)

அநுபல்லவி

திங்களணி யீசன்பாலா திவ்ய தெரிசனந்தந்து காரும் (சிங்)

சரணங்கள்.

1. இஷ்டமில்லையோ அவலேசம் இன்னமேனிந்தப் பரிகாஸம்
கட்டியணைத்தொரு முத்தமேதந்தாற் கைதொழுவேனுன்னை
நித்தமும். (சிங்)

2. பக்தன் துரைஸாமிகூறும்பதம் பாடியனுதினம் தேறும்
சக்திவேலாயுத நித்யானந்தனே சரணமிதோ சாமிகாரும்(சி)

15. இராகம் சங்கராபரணம், ஏகதாளம்.

கண்ணிகள்

1. வாடிவாடி கண்மணியே நாம்
ஜோடியாய் இருவரும் நலுங்கிடுவோம்
தேடி நிதம்நிதம் ஆடி விதம்விதம்
ஓடிவந்தேன் பார்-பார்-பார்
அடிவாடி பெண்ணேவாடி கண்ணே. (வாடிவாடி)

2. கட்டிக்கரும்பே கனிரசமே தங்கப்
பெட்டிக் கிசைந்த தவமருந்தே
திட்டமதாகவே அட்டிசொல்லாமலே
கட்டியொரு முத்தந் தா-தா-தா
அடிவாடி பெண்ணேவாடி கண்ணே. (வாடிவாடி)

3. உத்தமன் [illegible]கம் சக்திவேலன்றன்னை
எத்தனைவிதமெனும் துதிசெய்யும்,
சுத்த நிர்மல சித்த துரைஸ்வாமி
பத்தனுக்கருள் நீ செய்-செய்-செய்,
அடிவாடி பெண்ணேவாடி கண்ணே. (வாடிவாடி)

16. இராகம் கமாஸ்-ஆதி தாளம்.

பல்லவி.

நங்கையே நீ வாடி நலுங்கிடவே (நங்)

அநுபல்லவி.

நங்கையே வாடி மங்கள மாக. (நங்)

சரணங்கள்.

1. ஜாலம்செய்யாதே கண்ணே சகிக்கவு சமில்லையே
காலம் வீணாகாமல் காதலைத் தீர்க்க. (நங்கை)
2. கூடி மணந்தென்கையை கோர்த்திருக்கின்ற நேசம்
ஜோடி யென்ன விலாஸம் சூர்யப்பிரகாசம். (நங்கை)
3. நற்குண மாதரசே ஞானம் புகழுமிக்க
சற்குண துரைஸாமி தமிழ் படிக்க. (நங்கை)

---

17. இராகம்-பியாக். ஆதிதாளம்.

(அவனிடத்திலுனக் கென்னடி பேச்சு) என்ற வர்ண மெட்டு.

பல்லவி.

முற்று மோடி [illegible]தனே ஸாமி
உற்றமொழி சற்[illegible]ம், இல்லையோ தானே (முற்று)

சரணங்கள்.

1. பற்றுன் மேல் வைத்த பத்தினி யென்னோடு
சற்று தயை யுடன் நலுங்கிட
எத்தனை விதமேனும் நித்தமு மருவிடும்
சுத்த மனவாஸனே சுந்தரனே. (முற்று)
2. சின்ன வயதினில் சினேகித்த சீலா
உன்னத மாய் விளையாடும் லோலா
அன்னை சிவகாமி அருந்தவ பாலா
என்னை மருவிய என்வடி வேலா (முற்று)
3. ஐயன் கொடுத்த அருமணியே யென்
ஆவலுருக் கொண்ட கண் மணியே
மெய்யன் துரைஸாமி வையகந் தனிலே
ஐய் மகச்சொல்லும் அரும்புதம் பாடியும். [முற்று]

ஸ்ரீ மங்களம்.

18. இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

பார்வதி பாலனுக்கு ஜெயமங்களம்—திவ்ய
பன்னிருகை வேலனுக்கு சுபமங்களம் [பார்வதி]

அநுபல்லவி

சூரஸம்ஹாரனுக்கு ஸுப்ரமண்ய தீரனுக்கும்
சங்கரீ குமாரனுக்கு ஸாதுஜன வீரனுக்கு [பார்வதி]

சரணம்.

ஸத்ய விலாஸனுக்கு ஸங்கீதநேசனுக்கு
முகமந்தஹாஸனுக்கு முத்தமிழ்ப்ராந்தனுக்கு
ஹாரகெம்பீரனுக்கு அறுமுக இறைவனுக்கு
கூறுந் துரைஸாமிபதம் கொண்டாடுமன்பருக்கு [பார்வதி]

சுபம்.

118693

கல்யாணப் பாட்டுகள் முதற்பாகம்
முற்றிற்று.

விளம்பரம்.

விற்பனைக்குத் தயாராயிருக்கிற புஸ்தகங்கள்,

கல்யாணப்பாட்டுகள்.

முதல்பாகம் நலுங்கு ...	...	விலை அணா	1	தபால் சார்ஜு பிரத்தியேகம்.
இரண்டாம்பாகம் ஷை	...	,, ,,	1	
மூன்றும்பாகம் பூப்பந்தாடல்	...	,, ,,	1	
நான்காம்பாகம் ஊஞ்சல் பத்தியமுதலிய லாலிலைக்கோர்வைகள்		,, ,,	2	

ஒரே தடவையில் ஒரேதினுசில் 10 புஸ்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புஸ்தகம் இனும் கொடுக்கப்படும். வியாபாரிகளுக்கு 100க்கு 20 விதம் கம்மிஷன் கொடுக்கப்படும். வேண்டுவோர் அடியிற் கண்டிருக்கிற விலாஸத்துக்கு தங்கள் விலாஸத்தை தெளிவாய் யெழுதி வி. பி. (V. P.) மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

S. துரைஸாமி அய்யர்.

போட்டோக்ரபிக் ப்ளாக் காப்பிடிஷன் ஆபீஸ்,

திருநெல்வேலி.